# செயலாற்றுகை அறிக்கை

## சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

2018 ஜனவரி முதல் டிதம்பர் வரை

சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்
இல 35ஏ,
கலாநிதி என்.எம் பெரேரா மாவத்தை
பொரல்ல
கொழும்பு 08



## ***சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரின் கோரிக்கை***

நடைமுறையில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிளில் அதிகமானவர்கள் 2 வருடங்களுக்கு குறைவான அல்லது குறித்த தண்டப்பணத்தை செலுத்த முடியாமல் சிறைப்படுத்தப்பட்டவர்களாவர். எனினும் மாற்று தண்டனை முறையாக சிறு தவறுகள் செய்த குற்றவாளிகளை சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட முறையில் அக்குற்றவாளிக்கு மற்றும் அவரின் /அவளின் குடும்பத்திற்கு மற்றும் சமூகத்திற்கு போன்று அரசிற்கும் கிடைக்கக் கூடிய பிரதி பலன்கள் அதிகமாகும்.

கடந்த 2018 வருடத்தில் சமுதாஞ்சார் சீதிருத்தக் கட்டளைக்கு உட்படுத்தப்பட்ட குற்றவாளிகளில் அதிகமானவர்கள் போதைப் பொருள் தொடர்பான குற்றவாளிகளை சீர்திருத்தும் விஷேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வடமேல், தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் போன்று ஏனைய மாகாணங்களிலும் இவ்வாறான குற்றங்களை புரிந்த குற்றவாளிகளை எமது உத்தியோகத்தர்கள் சீர்திருத்த உள்ளனர்.

அனைத்தும் மாற்றம் அடையக்கூடிய இவ்வுலகில் மாற்றப்பட கடினமான விடயம் மனித நடத்தைகளாகும். ஏதோ ஒரு காரணத்திற்காக குற்றங்களை இளைத்த/புரிந்த குற்றவாளிகளின் குற்றவியல் நடவடிக்கைகளுக்கான காரணங்களை கண்டறிநது அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மேலும் குற்றங்களுக்கு உட்தபடுவதனை தடுத்து ஒரு சமூகத்திற்கு சிறந்த பிரஜையாக வழங்கும் பொறுப்பினை நாங்கள் புரிகின்றோம்.



ஆர்.பீ.எஸ்சமன்குமாரி
ஆணையாளர்
சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

**உள்ளடக்கம்**

**01. தெளிவுபடுத்தல்** **1-3**

01.1 நோக்கம் 4

01.2 திணைக்கள விபரங்கள் 5-6

**02. சீர்திருத்த நிகழ்ச்சிகள்** **7**

2.1 சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை 7-15

2.2 நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகள் (2018.01.01- 2018.12.31) 16-17

2.2.1 உளவள ஆலோசனை மற்றும் போதை பொருள் நிவாரணி 18

2.2.2 அபிவிருத்தி மற்றும் சிரமதான நிகழ்ச்சி 19

2.2.3 சமய வழிபாடு தொடர்பான வேலைத்திட்டம் 20

2.2.4 தொழில் பயிற்சி மற்றும் விவசாய வேலைத்திட்டம் 21-22

2.3 போதை பொருளுடன் தொடர்புடைய கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்யும் செயற்திட்டம்- வட மேல்,தெண் மற்றும் சப்ரகமுவ 23-26

**03. ஆளுமை விறுத்தி**

3.1 உத்தியோகத்தர் பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல் 27

3.2 2018 ஆம் வருடம் பயிற்சிகளுக்காக செய்த செலவுகள் 27

**04 எதிர்கால திட்டம்** 28

**05. செயற்திட்ட செலவுகள்** 29

**1.தெளிவு படுத்தல்**

**இலங்கையில் சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்திட்டம் உருவாக்குதல்**

1999வருடத்தில் நீதி அமைச்சின் கீழ் ஒரு செயற்திட்டமாக இலங்கையில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 2000.02.17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திரத்தம் ஒத்திகையையாக 3 நீதிவான் நீதிமன்றங்களில் அதாவது அலுத்கடை,மாலிகாகந்தை,கோட்டை போன்ற நீதிமன்றங்களில் செயற்படுத்தப்பட்டது. 2003 ஆண்டு ஒரு இலாக்காக இருந்து அதன் வெற்றியின் காரணமாக 2008.07.01 நீதி அமைச்சின் கீழ் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டது.

**1999** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் மூலம் சிறைச்சாலை செல்வதை தடுத்து அதற்கு பதிலாக நீதிவான் நீதிமன்றங்களினால் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பிறப்பிப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

மிக இலகுவாக குறிப்பிடுவதென்றால் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையொன்றை பிறப்பிப்பது இரண்டு ஆண்டுகளை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனையை உள்ளடக்குகின்றதோ அல்லது அத்தவறு தவிர்ந்த வேறொரு தவறுக்காக குற்றத்தீர்ப்பளிக்கபடுமிடத்து நீதிமன்றமானது அத்தகைய தவறாளி மீது மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது குற்றப்பணமொன்றை விதிப்பதற்குப் பதிலாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையொன்றை விதிக்கலாம்.மேலும்

1.சமூக வேலை நீதிமன்றத்தினால் குறிப்பிட்டு கொடுக்கப்படும் காள அளவில் தவராளர் வேலை செய்ய வேண்டும்.

2.கண்காணிப்பு சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது.

3.கல்வி மற்றம் தொழில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் கட்டளையாளரை உற்படுத்துதல்.

4.தவராளர் அவரின் போதை பாவனை பற்றி சுய பரிசோதனைக்கு உற்படுதல் வேண்டும்.சகலரும் சிகிச்சைக்கு உற்பட வேண்டும்.

5.தவராளர் அவரின் குற்றசெயற்பாடுகளில் இருந்து விடுபட செயற்படுத்தும் நிகழ்சிகளில் பங்குபற்றல்.

தவராளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதால் அவரினால் சமூகத்திற்கு பாரிய சிக்கல் ஏற்கடுகின்றது.சிறு தவறாளர் சிறைச்சாலையில் அடைக்கப்படுவதால் சிறையிலுள்ள பாரிய குற்றவாளிகளுடன் தொடர்புபடுவதால் அவர்களும் பாரிய குற்றவாளிகளாக மாறி சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுவார்கள் என கருதப்படுகிறது.குடும்பத்திற்கு உழைத்து கொடுக்கக் கூடியவர்கள் சிறைச்சாலைகளில் அடைகக்படுவதால் அவர்களின் குடும்பத்தில் பாரிய பொருளாதார பிரச்சினை ஏற்படுகிறது.அத்தோடு பொருளாதார சிக்கல்களில் இருந்து விடுபட பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.மேலும் பாடசாலை செல்லும் பிள்ளைகள் பள்ளி படிப்பை விட்டு விட்டு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.அத்தோடு சிறைச்சாலையில் அடைக்கப்படுபவர்களுக்காக அரசு பாரிய நிதியை செலவு செய்கின்றது.மேலும் இதனால் சிறைச்சாலைகளில் சனநெருக்கடியையும் ஏற்படுத்துகின்றது.சிறு தவறாளர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றுக்கொடுப்பதனால் சிறைச்சாலை சன நெருக்கடியையும் அரசு செலவு செய்யும் பாரிய செலவையும் குறைக்க முடியும்.நீதிமன்றத்தினால் சிறு தவறாளரான ஒருவருக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் சிறு தவறாளிகளின் குற்ற செயற்பாட்டை மாற்ற முடியம்.மற்றும் சமூகத்தில் வைத்தே சீர்திருத்தம் செய்து சிறந்த பிரசையாக மாற்ற முடியும்.


தூர தர்சன நோக்கு
சிறுதவறாளர்கள் மற்றும்
தவறுகள் செய்வார்கள் என
எதிர்பார்க்கப்படும் நபர்களை
நற்பிரசையாக மாற்றுதல்
உற்சாகமூட்டல்
•இருக்கும் வளங்களை இயன்ற
அளவு உபயோகித்தல்
•நிர்மான திறமை
•குழுக்களுக்கு இடையே புரிந்துனர்வு
•நிரந்தர முன்னேற்றம்
•பொறுப்பு
பணிக்கூற்று
பின்னூற்றல் செயற்பாட்டை
மேற்கொள்வதன் ஊடாக சிறு
தவராளர்கள் மற்றும் தவறுகள்
செய்வார்கள் என
எதிர்பார்கப்படும் குழுவினரின்
குடும்ப பொருளாதாரஆண்மீக
மற்றும் சமூகரீதியிலான
அபிவிருத்தியை சமுதாயஞ்சார்
சீர்திருத்த திணைக்களத்தின்
செயற்பாட்டின் ஊடாக
மேம்படுத்தல்.

## 01. நோக்கம்

1 **1999** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தை செயல்படுத்துவதன் ஊடாக சிறு குற்றங்களை புரியும் தவறாளர்களை சிறைச்சாலை செல்வதை தவிர்பதும் சமூகத்தில்வைத்தே அவர்களை சீர்செய்வதுமாகும்.

2 சிறு குற்றங்களை புரியும் தவறாளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதை தடுப்பதும் சிறைச்சாலைகளில் உள்ள சன நெறுக்கடியையும் இதனால் அரசுக்கு ஏற்படும் செலவுகளை கட்டுபடுத்துவதும் ஆகும்.

3 சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களின் உழைப்பை தேசத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்துதல்.

4 சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களை உளரீதியாக மற்றும் ஆண்மீகரிதீயாக முன்னேற்றத்திற்காக செயல்படுவது.


5 தவறுகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்கள் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றவர்களின் குடும்பத்தவர்களின் பொருளாதார மற்றும் ஆன்மீகரீதியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.

### சேவைகள் /திட்டங்கள்

1. சிறு தவறுகள் செய்யும் நபர்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உற்படுத்தல்.
2. கட்டளையாளர்களின் கல்வி அபிவிருத்தி மற்றும் ஆண்மீக வளர்ச்சிக்காக அபிவிருத்தி நிகழ்சிகளை நடாத்துதல்.
3. கட்டளையாளர்களின் உளவளத்திற்காக மற்றும் தேக ஆரோக்கியத்திற்காக உளவள ஆலோசனை நிகழ்சிகளை நடாத்துதல்.
4. கட்டளையாளர்களின் விசேட திறண்கள் மற்றும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக தொழில் பயிற்சிகளை நடாத்துதல்.
5. கட்டளையாளர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல்.
6. கட்டளையாளர்களை போதை பொருள் பாவனையில் இருந்து விடுபட மருத்துவ சிகிச்சைகளுக்க உற்படுத்தல்.
7. ஆக்கத்திறணான நிகழ்சிகளை நடாத்துதல்.

### நிறுவனத்தின் முதலிடம்

1. சிறந்த புனரவாழ்வு மற்றும் மருத்துவ சிகிச்சைகள் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சிறந்த பிரசைகளாக மாற்றுவது.
2. மணித வளத்தை அபிவிருத்தி செய்வது



ஆணையாளர்
பிரதி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி)
பிரதி உதவி ஆணையாளர் (நிர்வாகம்)
கணக்காளர்
சி.ச.சீ.உ
சி.ச.சீ.உ (தலைமையகம்)
நிர்வாக உத்.
மொழிபெயர்ப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
ச.சீ.உ
வே.ப
அபிவிருத்தி பிரிவு
அபி.உத் வேலைதிட்ட உதவி
முகா. உ
எழுதுனர்
கா.உ
நிர்வாக பிரிவு
கணனி.உ
முகா. உ
எழுதுனர்
ஓட்டுனர்
கா.உ
கணக்கு பிரிவு
முகா. உ
எழுதுனர்
கா.உ

**சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2018.12.31 திகதியின் உத்தியோகத்தர்கள் விபரம்**

| | பதவி | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொகை | தற்சமயம் உள்ள உத்தியோகத்தர் தொகை |
|---|---|---|---|
| 1 | சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் | 01 | 01 |
| 2 | உதவி மற்றும் பிரதி ஆணையாளர் | 02 | 01 |
| 3 | கணக்காளர் | 01 | 01* |
| 4 | சிரேஸ்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் | 12 | 02 |
| 5 | மொழிபெயப்பாளர் தமிழ் | 01 | …. |
| 6 | சமுதாயஞ்சார் சீர்திரத்த உத்தியோகத்தர் | 112 | 105 |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01* |
| 8 | வேலைதிட்ட உதவியாளர் | 04 | 01 |
| 9 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 328 | 271 -04 |
| 10 | கணனி உதவியாளர் | 02 | 01 |
| 11 | எழுதுனர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் | 20 | 12 |
| 12 | வேலை பரிசோதகர் | 114 | 114 01** |
| 13 | காரியால உதவியாளர் | 08 | 05 |
| 14 | ஓட்டுனர் | 03 | 02 |
| | மொத்தம் | 609 | 523 |

** யுத்ததினால் கொலை செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு அ.நி.சு படி சம்பளம் கொடுக்கப்படுகிறது.


* ஓய்வு பெற்ற அதிகாரிகளான கணக்காளர் மற்றும் பரிபாலன நிலதாரி ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

## 02.சீர்திருத்த திட்டம்

### 2.1 சமுதாயஞ்சார் சீர்திரத்த கட்டளை

நீதிவான் நீதிமன்றங்களினால் வழங்கப்டுகின்ற சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைகள்

| மாகாணம் | தவறாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 5382 |
| மத்திய | 825 |
| தெற்கு | 1972 |
| வடக்கு | 1318 |
| கிழக்கு | 496 |
| வட மேல் | 890 |
| வட மத்தி | 214 |
| ஊவா | 495 |
| சப்ரகமுவ | 1191 |
| **மொத்தம்** | **12783** |





மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் மேல் மாகாணத்திற்கு உரியது.குறைந்த எண்ணிக்கையான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றது வட மத்திய மாகாணத்தில் ஆகும். மத்திய மாகாணத்தின் கட்டளையாளர்களின் எண்ணிக்கை ஊவா மாகாணத்தின் கட்டயைாளர்களின எண்ணிக்கையின் இரு மடங்காகும்.தென் மற்றும் ஊவா மாகாணத்தின் கட்டளையாளர்களின் எண்ணிக்கையின் இரு மடங்காகும்.


➢ **கட்டளையாளர்களின் குற்றங்கள் - (2018.01.01 – 2018.12.31)**

| **குற்றங்கள்** | **மொத்தம்** | **(%)** | |
|---|---|---|---|
| ஹெரோயின் | 3131 | 24.49 | |
| கஞ்சா | 1418 | 11.09 | 65.21 |
| சட்டவிரோத மது | 3788 | 29.63 | |
| பொதுமக்கள் தொல்லை | 907 | 7.10 | |
| திருட்டு | 42 | 0.33 | |
| ஏமாற்றுதல் | 2 | 0.02 | |
| சட்டவிரோத ஆயதம் | 18 | 0.14 | |
| களவாடபட்ட பொருட்களை தன்வசம் வைத்திருத்தல் | 4 | 0.03 | |
| சுதாட்டம் | 956 | 7.48 | |
| கலகம் | 5 | 0.04 | |
| இதர | 2512 | 19.65 | |
| மொத்தம் | **12783** | 100.00 | |

கட்டளையாளர்களில் 65% ஹெரோயின் , சட்டவிரோத மது மற்றும் கஞ்சா அடிமையாகுதல்





மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் திருமணம் செய்தவர்கள் மற்றும் முழு கட்டளையாளர்களில் 67%. என்றாலும் குடும்பத்துக்கு உழைத்து கொடுப்பவர்கள் சிறைச்சாலையில் அடைக்கபடுவதால் குடும்பத்தின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைகின்றது.ஆதலால் கணவனோ மனைவியோ குடும்பத்தை நடாத்துவதற்கு குற்றச்செயல்களுக்கு ஆளாகின்றனர்.





மேற்படி தகவள்களின் அடிப்படையில் அதிகமான கட்டளையாளர்கள் ஆண்களே மிக குறைந்த எண்ணிக்கையினரே பெண்கள்.


.




மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் 7-9 ஆண்டு வரை மட்டுமே பாடசாலை கல்வியை பெற்றுள்ளார்கள்.2018 வருடத்தில் இது 27% ஆகவும்.இரண்டாவதாக க.போ ச/த வரை கல்வியை பெற்றுள்ளனர். க.போ உ/த வரை கல்வியை கற்றவர்கள குறைவாகவே உள்ளனர். அது 2018 ஆண்டு 6% ஆகும்.2018 ஆம் ஆண்டு பாடசாலை செல்லாதவர்களின் வீதம் ஆகும்.இதனடிப்படையில் தரவுகளின் படி க.போ ச/த தரத்திற்கு கீழ் கல்வி கற்றவர்களின் வீதம் 88% ஆகும். தரவுகளின் படி அதிகமான கட்டளையாளர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.இதனடிப்படையில் குறைந்த கல்வியறிவை கொண்டவர்கள் தவறான செயற்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்பு அதிகமாக உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.




2018 மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் கூலி தொழிலாளர்களாகவே இருக்கின்றனர்.அத்தோடு தற்காலிய தொழில் செய்யகூடியவர்களும் இருக்கின்றனர்.2018 ஆண்டு நிரந்தர தொழில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை தொழில் செய்யதவர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்காகும். என்றாலும் 2018 ஆம் ஆண்டு நிரந்தர தொழில் செய்பவர்களின் வதும் 11% ஆகும். இதனடிப்படையில் அதிகமான கட்டளையாளர்கள் கூலி தொழிலாளர்கள் மற்றும் தற்காலிய தொழிலாளர்கள் மற்றும் தொழில் அற்றவர்கள் முறைப்படி 58%,26%,5% ஆகும்.மேற்படி தகவள்கள் அடிப்படையில் சரியான பொருளாதார நிலை இல்லாதவர்கள் 89%Fw்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அதிகம்.





மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் வயது 23-32 ஆகும்.இதனால் எமக்கு புலப்படுகின்றது அதிகமான வாலிப வயதுடையவர்கள் தமது ஒரே வயதனவர்களின் ஆதிக்கத்தால் மற்றும் சரியான தொழில் இல்லாமை மற்றும் சிறு வயதில் திருமணம் செய்வதால் தமது குடும்பத்தை சரியான முறையில் நடாத்த முடியாத

காரணத்தால் இவ்வரான குற்றச்செயல்கள் செய்வதற்கு தயாராகின்றார்கள்.மேலும் வயது 18-22,23-32,33-37,38-42 உள்ளவர்களே அதிகமான குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள் ஆதலால் இவர்களினால் குடும்ப பொருளாதார,ஆண்மீக மற்றும் சமூகரீதியிலான அபிவிருத்திக்கு பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றது.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(மேல் மாகாணம்)**




2018 ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில் சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டிற்கு அதிகளவிலான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றது மேல் மாகாணத்தில் ஆகும்.அத்தோடு ஹெரோயின் சம்பந்தமான அதிகளவிளான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றிருப்பதும் மேல் மாகாணத்தில் ஆகும். 2017 ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபாணம் சம்பந்தமான கட்டளையாளர்கயே அதிகமாக கிடைக்கப்பெற்றது.அத்தோடு ஹெரோயின் சம்பந்தமான அதிகளவிளான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளது

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(மத்திய மகாணம்)**



2017,2018, ஆண்டுகளில் மத்திய மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் பொது மக்களக்கு இடையூறு விளைவித்தல் சம்பந்தமான அதிக கட்டளையாளர் கிடைக்கப்பெற்றனர்.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**ஊவா மகாணம்)**




2017,2018, ஆண்டுகளில் ஊவா மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் பொது மக்களக்கு இடையூறு விளைவித்தல் சம்பந்தமான அதிக கட்டளையாளர் கிடைக்கப்பெற்றனர

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(தென் மாகாணம்)**



2017,2018, ஆண்டுகளில் தெண் மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் பொது மக்களக்கு இடையூறு விளைவித்தல் சம்பந்தமான அதிக கட்டளையாளர் கிடைக்கப்பெற்றனர.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(சப்ரகமுவ மாகாணம்)**




2017,2018, ஆண்டுகளில் சப்ரகமுவ மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் சப்ரகமுவ மாகாணத்தில் ஹெரோயின் மற்றும் இதர தவறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(கிழக்கு மாகாணம்)**




இந்த மாகாணத்திலும் பொது மக்களுக்கு இடையுறு செய்யும் குற்றமும் சட்ட விரோத மதுபானமும் அதிகமாக கணப்படுகிறது.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(வட மேல் மாகாணம்)**




இந்த மாகாணத்திலும் சட்ட விரோத மதுபாணம் அதிகளவில் நடைபெறும் குற்றமாகும் இது மற்ற மாகாணங்களுடன் ஒப்பிடும் போது அதிகமாகும்.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**


**(வட மத்திய மாகாணம )**




இந்த மாகாணத்திலும் சட்ட விரோத மதுபாணம் அதிகளவில் நடைபெறும் குற்றமாகும் இது மற்ற மாகாணங்களுடன் ஒப்பிடும் போது அதிகமாகும்.

**2017-2018 வருடங்களில் குற்றங்களில் கட்டளையாளர்களின் தொகை**

**(வட மாகாணம்)**




இந்த மாகாணத்திலும் சட்ட விரோத மதுபாணம் அதிகளவில் நடைபெறும் குற்றமாகும் இது மற்ற மாகாணங்களுடன் ஒப்பிடும் போது அதிகமாகும்.


**நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகள் (2018.01.01-2018.12.31)**



**2.2 நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகள் (2018.01.01 -2018.12.31)**

சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களுக்காக ஆலோசனை வழங்குவது மற்றும் போதை நிவாரனம் மற்றும் ஆன்மீக வளர்ச்சி மற்றும் தொழில் பயிற்சி போன்றவற்றை மேற்கொன்டுள்ளோம்.அவர்களை கொண்டு அனைத்து நீதிமன்றங்களிலும் சிரமதான நிகழ்சிகள் நடத்தியுள்ளோம்.

**சீர்திருத்த நிகழ்சி**





❖ 2018 ஆம் வருடம் சீர்திருத்த நிழ்ச்சி மற்றும் வளவாளர்களுக்குமாகரு.10,000.00 பெற்றுக்கொடுக்கப்பட்ட தொகைகள்(2018.01.01 முதல்2018.12.31 வரை )

| நிகழ்சிகளின் என்னிக்கை | செலவு |
|---|---|
| 3228 | 978,371.00 |

**2.2.1 உளவள ஆலோசனை மற்றும் போதை பொருள் நிவாரணி நிகழ்சிகள்**

பிரதேச காரியாலயங்கள் மூலம் 2018.12.31 வரை உளவள ஆலோசனை மற்றும் போதை பொருள் நிவாரணி நிகழ்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.இதை மாகாணரீதியில் நோக்குவோம

**போதை பொருள் நிவாரணி நிகழ்சிகள்**




**போதை பொருள் நிவாரணி நிகழ்சிகள்**



தனி உபதேசம் நுகேகொட காரியாலயம்



குழுஉபதேசம் கழுத்தரை காரியாலயம்






போதை ஒழிப்பு பண்டாரவெலை

போதை ஒழிப்பு மட்டக்களப்பு

### 2.2.2 அபிவிருத்தி மற்றும் சிரமாதன வேலைத்திட்டம்

பிராந்திய காரியாலயங்களில் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களை தொடர்புபடுத்தி டெங்கு ஒழிப்பு வீதி சுத்தம் செய்தல் மற்றும் அரச கட்டிடங்கள் மற்றும் விகாரைகள் புனர்நிர்மானம் செய்தல் மற்றும் சிரமாதான நிகழ்சிகள் நடாத்தியுள்ளோம். மாகாணரீதியில் அட்டவனைபடுத்தப்பட்டுள்ளது.

### சிரமதான நிகழ்சி








சிரமதான நிகழ்ச்சி கல்கிஸ்ஸ காரியாலயம்

சிரமதான நிகழ்ச்சி கல்முனை காரியாலயம்

### 2.2.3 சமய வழிபாடு தொடர்பான வேலைத்திட்டம்

கட்டளைக்கு உட்பட்டவர்களின் உளரீதியான மற்றும் ஆன்மீகரீதியாக அபிவிருத்தி செய்வதற்காக சமயம் தொடர்பான திட்டம

**ஆண்மீக நிகழ்சிகள்**





ஆண்மீக நிகழ்ச்சி அல்பிட்டி காரியாலயம்



ஆண்மீக நிகழ்ச்சி கல்முனை காரியாலயம்



ஆண்மீக நிகழ்ச்சி கலுதரை காரியாலயம்



ஆண்மீக நிகழ்ச்சி கல்முனை காரியாலயம்

## 2.2.4. தொழில் பயிற்சி மற்றும் விவசாய வேலைத்திட்டம்

சகல பிராந்திய காரியாலயங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களின் உழைப்பை விவாசாய திட்டங்களில் ஈடுபடுத்தியுள்ளோம்.சில சந்தை பொறுக்களையும் உருவாக்கியுள்ளோம்.அவர்களின் பொருளாதரமும் இதன் மூலம் வளர்ச்சியடைகிறது.தவறாளர்களால் உருவாக்கப்படும் பொருக்களை விற்பதன் மூலம் வரும் வருமானத்தை அரச திரைசேரிக்கு வழங்குகின்றோம்.இதன் மூலம் நாடு அபிவிருத்தியடைகிறது



சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயம் மொரவக்க



சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயம் ஹோமகம



சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயம் மினுவன்கொட



சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயம் மினுவன்கொட

## சீர்திருத்த நிகழ்சிகள்



சீர்திருத்த நிகழ்ச்சி சமந்துறை



போதை ஒழிப்பு - மட்டக்களப்பு

## 2.3 போதை பொருட்களுக்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்வதற்கான செயற்திட்டம் வட மேல் மாகாணம் மற்றும் தெண் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மகாணம்

### 2.3.1 பின்னணி

வடமேல் மாகாணம்,தெண் மற்றும் சப்ரகமுவ மகாணங்களில் கடந்த 05 வருட காலத்தில் சட்ட விரோத மதுபானத்துடன் தொடர்புடைய 16362 பேரும் கஞ்சாவுடன் தொடர்புடைய 1615 பேரும் ஹெரோயினுடன் தொடர்புடைய 1364 பேரும் கட்டளையாளர்களாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாக கிடைத்துள்ளது. 2017 வருடம் வட மேல் மாகாணத்தில் கிடைக்கப்பெற்ற மொத்த சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 5250 பேர் அதில் 3271 பேர் (62.30%) போதை பொருட்களுடன் தொடர்புபட்ட கட்டளையாளர்கள். இலங்கையில் மற்றய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது பொதைபொருட்களுடன் தொடர்புடைய தவறாளர்கள் அதிகமாக கிடைக்கப்பெற்றிருப்பது வட மேல் மாகாணத்தில் ஆகும்.ஆதலால் இச் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக இந்த மாகாணங்களை தெரிவு செய்தோம்.

போதை பொருள் பாவனை செய்யகூடிய தவறாளர்களுக்கு சீர்திருத்த திட்டத்தை செயற்படுத்தும் போது போதை நிவாரண மருத்துவ சிகிச்சை முறையை கையாள வேண்டும் அத்தோடு இம் மருந்து சிகிச்சையை நீண்ட காலமாக போதை பாவனை செய்பவர்களை இணங்கண்டு சிகிச்சை அளிக்கவேண்டும். அவ்வாறில்லையேல் அது பிரயோசனம் அற்றதாகவே அமையும். மேலும் ஹெரோயின் பாவனைக்கு அடிமையானவர்களை சீர்திருத்தம் செய்யும் போது சரியாக திட்டமிடப்பட்டு அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் உளவள ஆலோசனைகள் வழங்கப்படல் வேண்டும்.

02.2018 ஆம் ஆண்டு போதை பொருட்களுக்கு அடிமையான தவறாளர்கள் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாக கிடைத்த விபரம்

**2.3.2போதைவஸ்திற்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள்.**

| மாகாணம் | தவறு அடிப்படையில் கட்டளை | | | போதை பொருட்களுக்காக கிடைக்கப்பெற்ற கட்டளையாளர்கள் | வருடத்தின் முழு கட்டளை | போதை பொருட்கள் சம்பந்தமான கிடைக்கப்பெற்ற முழு கட்டளையாளர்களின் வீதம்(%) |
|---|---|---|---|---|---|---|
| | ஹேரோயின் | சட்ட விரோத மதுபானம் | கஞ்சா | | | |
| வட மேல் | 62 | 546 | 35 | 643 | 890 | 72.24 |
| மேல் | 2508 | 1060 | 689 | 3089 | 5382 | 57.39 |
| வட மத்திய | 04 | 136 | 16 | 156 | 214 | 72.89 |
| ஊவா | 40 | 284 | 52 | 376 | 495 | 75.95 |
| சப்ரகமுவ | 103 | 762 | 86 | 951 | 1191 | 79.84 |
| மத்திய | 171 | 238 | 165 | 574 | 825 | 69.57 |
| தென் | 222 | 473 | 175 | 870 | 1972 | 44.11 |
| கிழக்கு | 05 | 132 | 71 | 208 | 496 | 41.93 |
| வட | 16 | 157 | 129 | 302 | 1318 | 22.91 |

## 2.3.3செயற்திட்டத்தின் நோக்கம்

- ❖ வடமேல் மாகாணம்,தெண் மற்றும் சப்ரகமுவ மகாணங்களில் போதைவஸ்திற்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 70% ஆனோர் அதிலிருந்து முற்றாக விடுவித்தனர்.
- ❖ மேற்படி மாகாணங்களில் போதைவஸ்திற்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 585 பேர்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.

**2.3.4செயற்திட்டத்தின் ஆக்கபூர்வ திட்டங்கள்**

- ❖ போதை பொருட்களுக்காக செலவு செய்யும் பணத்தை தனது குடும்பத்திற்காக செலவு செய்யும் போது அவர்களின் குடும்பம் சமூகரீதியில் உயர்மட்டத்தை அடையும்.
- ❖ போதை பொருட்களுக்காக செலவு செய்யும் காலத்தை வேறு தேவைகளுக்காக செலவு செய்யும் போது அவர் சமூகத்தில் அதிக பிரசித்தி பெற்றவராக மாறுவார் (பொருளாதார விடயம் / ஆண்மீக விடயம் / தனது குடும்பத்துடன் உல்லாசமாக இருத்தல் / சமூக சேவை ஆகியவற்றில் பங்குபற்ற செய்தல்)
- ❖ போதை பொருட்கள் பாவனையில் இருந்து விடுபட செய்வதினால் நல்ல தேகஆரோக்கியம் உள்ள நபராக மாறுவார் மற்றும் குடும்பத்தின் பொறுப்புகளை எடுத்து நடாத்தக்கூடியவராகவும் மற்றம் குடும்பத்தில் உள்ள உறவை உறுதிப்படுத்தல்.
- ❖ மேற்படி மாகாணங்களில் உள்ள 35 நீதிவான் நீதிமன்றங்களில் 37 சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களும் கட்டளையாளர்களின் கண்காணிப்புக்காக மற்றும் அலுவலக எழுத்து வேலைகளுக்காக 44 வேலை பரிசோதகர்களும் 117 பிரதேச செயலகங்களுக்கும் 117 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர்.இந்த உத்தியோகத்தர்களின் உதவியையும் பெறும்படியாக இச் செயற்திட்டம் அமைந்துள்ளது.

❖ கட்டளையாளர்களில் அதிகமானோர் சட்ட விரோத மதுபானத்துடன் தொடர்பு பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் அவர்களில் அதிகமானோர்களின் வயது 18-40ற்கு உற்பட்ட நபர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான கட்டளையாளர்களை சரியான முறையில் சீர்திருத்தம் செய்து அவர்களுக்கு நல்ல தொழில் முறையையும் சரியான முகாமைத்துவத்தையும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகிறதது. அவர்களின் வாழ்கையை சீர்திருத்திக்கொள்ள சந்தர்பமும் வழங்கப்பட்டுள்ளது. இக் கட்டளையாளர்களில் மானவர்கள் தொழில் அற்றவர்கள் மானவர்கள் கூலி வேலை செய்வோர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பொருளதார ஊக்கிவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இவர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாவதற்கு பிரதான காரணம் சரியான கல்வியறிவு இல்லாமையே. மற்றும் நிரந்தர தொழில் இல்லாத காரணத்தால் ஏதாவது முறையில் பணம் உழகைக்கிறார்கள் ஆதலால் போதை பொருள் மற்றும் குற்ற செயற்பாடுகளில் ஈடுபட ஏதுவான காரணியாகும்.

## 2.3.5செயற்திட்டத்தின் வெற்றி

❖ வடமேல் மாகாணம்,தெண் மற்றும் சப்ரகமுவ மகாணங்களில சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயங்களில் போதை பொருட்களுக்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திரத்த கட்டளையாளர்கள் 4053பேர் கிடைக்கப்பெற்றனர் அதில் கட்டளையாளர்கள் 3140 பேர்களை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தினோம். இவ்வறாக மருத்துவ சிகிச்சைக்காக உற்படுத்தப்பட்டவர்களில் 2386பேர் முற்றாக போதை பொருள் பாவனையில் இருந்து விடுபட்டனர்.இவ்வாராக போதை பொருள் பாவனையில் இருந்து விடுபட்டவர்கள் வீதம் இது நாம் எதிர்பார்த்த வீதத்தை விட அதிகமானதே மருத்துவ சிகிச்சையின் பின்னர் அவர்களுக்கு உளவள ஆலோசனை, குடும்ப அபிவிருத்த திட்டங்கள் ,தொழில் பயிற்சி, கல்வியறிவு,ஆளுமை வளர்ச்சி நிகழ்சிகள் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் தேவைகேற்ப பெற்றுக்கொடுக்கப்பட்டன. முற்றுமுழுதாக போதை பொருள் பாவனை அல்லது விற்பனை செய்தல் போன்ற விடயங்களில் இருந்து விடுபட்ட கட்டளையாளர்களக்கு வாழ்வாதார உதவித் தொகை பிரதேச செயலாளர் ஊடாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் ரூபா 50000.00 பெற்றுக்கொடுக்கப்பட்டது.

## 2.3.6.செயற்திட்டத்தின் முன்னேற்றம்

| முன்னேற்றம் | வட மேல் | சப்ரகமுவ | தெண் |
|---|---|---|---|
| கட்டளையாளர்களை போதைவஸ்துலிருந்து விடுபடசெய்யல் ÷ சிகிச்சை முஇத்தவர்கள் × 100) | 68.13% | 88.53% | 94.90% |
| மொத்த கட்டளையாளர்கள் | 877 | 1089 | 1174 |
| முற்றாக சிகிச்சை செய்து முடித்தவர்கள் | 475 | 349 | 255 |
| போதையில் இருந்து மீட்டவர்கள் | 325 | 309 | 242 |
| சுய தொழிலுக்காக உற்புகுத்தியவர்கள் | 156 | 33 | 80 |
| தோழில் ரீதியில் சிகிசடசை அளிக்கப்பட்ட கட்டளையாளர்கள் | 150 | 40 | 13 |

## 2.3.7. செயற்திட்ட செலவீனம்

| | வட மேல் | சப்ரகமுவ | தென் |
|---|---|---|---|
| திறன் விருத்தி | 89,277.00 | 571,011.00 | 1,038,853.00 |
| சுய தொழில் ஊக்குவிப்பு கடண் தொகை | 2,054,060.00 | 476,000.00 | 1,475,250.00 |
| கட்டளையார்களுக்கான வேலைத்திட்டங்கள் | 8,310.00 | 1860.00 | |
| வேலைதிட்ட மேற்பார்வை | 72,732.00 | 47,550.00 | 121,090.00 |

இதற்கு மேலதிகமாக குடும்ப அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சுயத்தொழில் நன்கொடை (வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட மாகாணங்களில்) ரூபா.25,000/= க்கு உட்பட்ட மொத்தமாக ரூபா.1,815,735.00 77 கட்டளையாளர்களுக்கு கொடுக்கப்பட்டது.

| **குடும்ப அபிவிருத்திழ நிகழ்சிக்காக** | **செலவு** |
|---|---|
| **79** | **1,850,735.00** |

## 03. திறன் விருத்தி

### 3.1 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்சிகள் (01.01.2018-31.12.2018)

திணைக்களத்தை வினைத்திறன் ஆக்குவதற்கு சிறப்பாக தொழிற்படுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஒரு சிறந்த பயிற்சி தேவைபடுகிரது எனவே அதற்காக 2018 ஆண்டு முதல் பயிற்சி தேவையானவர்களை இணங்கண்டு வேலை பரிசோதகர் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலாக உத்தியோகத்தர்களுக்காக கள பயிற்ச்சிக்கும் பண ஒதுக்கீடு செய்தது. இலங்கை அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் வளங்கப்படுகின்றன.

.

### <u>3.2 2018வருடத்தில் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்கான செலவு விபரம்.</u>

| | உத்தியோகத்தர் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உ.ஆணைய ாளர்) | கணக்காளர் | கி.ச.மு.உ | ச மு ஒ | அபி. உ | கணனி உகு | மு.க.உ | வேலை பரி |
| நிகழ்சிகளின் எண்ணிக்கை | 2 | 2 | 3 | 1 | 2 | 2 | 6 | 1 |
| செலவு | රු.420620.00<br>$ 1294.97 | රු.107000.00 | 106000<br>US2400 | රු.250000.00 | රු.73000.00 | රු.46500.00 | රු.488,980.00 | රු.50000.00 |

## 4.0 எதிர்கால திட்டம்

01.போதை பொருட்களுக்கு அடிமையாகி சிறு தவறுகளை செய்யும் கட்டளையாளர்களை சிறந்த பிரசைகளாக மாற்றி அவர்களின் குடும்ப மற்றும் பொருளதாரரீதியில் முன்னேற்றம் அடைய செய்வது.( மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் போதை பொருட்களுக்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்வதற்கான விசேட செயற்திட்டம் 2019ல் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது).

02.சமுதாயஞ்சார் சீர்திருத்தம் பற்றி மக்களை தெளிவுபடுத்துவதன் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையை அதிகரிக்க செய்ய முடியும் மற்றும் சிறு தவறுகளுக்காக சிறைச்சாலை செல்வதையும் குறைக்கலாம்.

02. தவறுகள் செய்வார்கள் என எதிர்பார்கப்படும் நபர்களை கண்டறிந்து பிரதேச செயலகத்தில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் சீர்திருத்த நிகழ்சிகளை நடாத்துவது

03.சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கு முதுகலை பாடநெறியை கொடுத்தல்

04.அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தவறாளர்களின் பின்னூற்றல் செயற்பாட்டை செய்தல்.

05.திணைக்கள அதிகாரிகளின் முன்னேற்றத்தை கண்டரியவதற்கான ஒரு முறையை கண்டரிதல்.

06.சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் தகவல் முகாமைத்துவத செயற்பாட்டை உருவாக்குதல்.

## செயற்திட்ட செலவுகள் - 2018

| செயற்திட்டம் மற்றும் சம்பளங்கள் இதர கொடுப்பனவுகள் | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| | வரவு செலவு மதிப்பீடு | மதிப்பீடு | மு.ரே.66 සහ மு.ரே.69 | தேசிய ஒதுகீடு (1+2+3) | முழு செலவு | தேசிய பெபேறு மீதி மேலதிகம (4-5) |
| | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. |
| சம்பளங்கள் | 236,400,000 | | -918,000 | 235,482,000 | 230,747,981 | 4,734,019 |
| இதர கொடுப்பனவுகள | 40,558,000 | | -4,543,000 | 36,015,000 | 33,742,322 | 2,272,678 |
| மொத்தம் | 276,958,000 | | -5,461,000 | 271,497,000 | 264,490,303 | 7,006,697 |

## மூலதன செலவுகள்

| செலவு விடயம் | விடயம் இல | நிதி குறியீட்டு இல | விடயம் | (1) வரவு செலவு மதிப்பீடு | (2) மதிப்பீடு | (3) மு.ரே.66 සහ மு.ரே.69 | (4) தேசிய ஒதுகீடு (1+2+3) | (5) முழு செலவு | (6) தேசிய பெபேறு மீதி மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2001 | | 11 | கட்டிடங்கள் | 600,000 | | | 6,000,00 | 360,446 | 239,554 |
| 2002 | | 11 | பொறி இயந்திரம் | 200,000 | | | 200, 000 | 160,290 | 39,710 |
| 2003 | | 11 | வாகாணம் | 200,000 | | | 200,000 | 44,280 | 155,720 |
| 2102 | | 11 | தளபாடம் | 4,000,000 | | | 5,440,000 | 3,878,112 | 1,561,888 |
| 2103 | | 11 | பொறி இயந்திரம் மற்றும உபகரணம் | 1,000,000 | | | 1,195,000 | 1,176,550 | 18,450 |
| 2401 | | 11 | பயிற்சி கொள்திறன் கட்டுமானம் | 4,000,000 | | | 4,000,000 | 2,355,349 | 1,664,651 |
| 2509 | | 11 | வேறு | 5,000,000 | | 3,826,000 | 8,826,000 | 8,819,318 | 6,681 |
| | | | மொத்தம் | 1,5,000,000 | | 5,461,000 | 20,461000 | 16,774,345 | 3,686,655 |